சாட்சியின் சாட்சியம்
கு.வி.மு.ச. XXXIII வது அத்தியாயம் கீழ்
குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2
சிவகாசி

CC. No.134 - 2019

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | | PW 1 |
| பெயர் | : | சக்கரை முத்து |
| தந்தை-கணவர் பெயர் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | |

கிரேடு-3 பெஞ்ச் கிளார்க் திரு.முத்துக்குமார் என்பவரால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு 2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ம் தேதி.

**முதல் விசாரணை**

நான் இந்த புகார் மனுவின் புகார்தாரர் ஆவேன். நான் சத்தியபிரமாணத்தின் பேரில் நிருபணவாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன். எதிரி எனக்கு தரவேண்டிய கடன்தொகை ரூ.3,00,000 த்திற்காக 10.6.2019ம் தேதியிட்டு மகாராஷ்டிரா வங்கி, சிவகாசி கிளைக்குரிய காசோலை கொடுத்தார். காசோலை **பு.சா.ஆ.1** ஆகும். காசோலையை நான் வசூலுக்கு தாக்கல் செய்த போது மேற்படி காசோலைக்கான தொகைக்கு போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை **பு.சா.ஆ.2** ஆகும். காசோலை திருப்பப்பட்டது குறித்தும் காசோலை தொகையை கேட்டும் நான் 21.6.2019 ம் தேதி நான் வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் **பு.சா.ஆ.3** ஆகும். மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை **பு.சா.ஆ.4** ஆகும். பின்னர் 10.8.2019 ம் தேதியிட்டு எதிரி அவர் வழக்கறிஞர் மூலம் எனக்கு அனுப்பிய ஒரு அறிவிப்பு **பு.சா.ஆ.5** ஆகும். நான் எனது வழக்கறிஞர் மூலம் மேற்படி அறிவிப்புக்கு 14.8.2019 ம் தேதி எதிரியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் **பு.சா.ஆ.6** ஆகும். மேற்படி அறிவிப்பை நான் எதிரிக்கும் , எதிரியின் வழக்கறிஞருக்கும் அனுப்பினேன். மேற்படி அறிவிப்பை மேற்படி இருவரும் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (இரண்டு எண்ணிக்கை) **பு.சா.ஆ.7 வரிசை** ஆகும். புகார் படி தீர்ப்பாக வேண்டுமென்று பிராதித்து கேட்டுக் கொள்கிறேன்.

(எதிர்மனுதாரர் தரப்பில் புகார்தாரரை விசாரணை செய்ய கால அவகாசம் கேட்டு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது)